# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 - 4354302*

## சாத்தான்

**முன்னுரை:**

சர்வவல்லமை பொருந்திய தேவனுக்கு அடுத்தபடியாக **இந்த அண்டசராசரங்களில் வல்லமை பொருந்தியவன் சாத்தானே** என்று வேதம் தெரிவிக்கின்றது. சாத்தான் என்றதுமே பலருக்கு அவன் ஒரு கேலிப்பொருளாகவும், குட்டிச்சாத்தான் போன்ற நகைச்சுவைகளே நினைவுக்கு வரும். ஆனால் சாத்தான் என்பவன் உண்மையில் இருப்பவன். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு வழியில் அவன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருப்பவன். இங்கு இந்தப் பாடம் உங்களுக்கு சாத்தானைக் குறித்து அறிந்துகொள்வதற்கும், அவன் என்னவாயிருக்கிறான் என்றும், அவனை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்றும் உங்களுக்குக் கற்றுத்தருகிறது.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

1. எந்த ஒரு போராட்டத்திலும் நீங்கள் உங்களது எதிரியையும், அவனுடைய போர்த்தந்திரங்களையும் அறிந்துகொள்வது முக்கியமானதொன்றாகும்.

2. **சாத்தான் தேவனுக்கும், மனிதனுக்கும் மகா பெரிய எதிரியாக இருக்கிறான்.** எனவே நாம் சாத்தானைக் குறித்து அறிந்து கொள்வதும், அவனை எவ்வாறு தோற்கடிக்கலாம் என்பதைத் தெரிந்துகொள்வதும் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

3. நாம் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவினிடம் வரும்போது சாத்தான் நம்மை வழி மறித்துத் தடைபண்ணுகிறான். இந்தக் காரியத்தில் அவன் தோற்றுவிட்டால் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையையும், கிறிஸ்தவ சாட்சியையும் பயனற்றதாக்கப் பிரயாசப்படுகிறான். இந்தக் காரியங்களை செய்து முடிப்பதற்கு அவன் என்னென்ன முறைகளைக் கையாளுகிறான் என்று அறிந்துகொள்வது முக்கியமானதொன்றாகும். இதைத் தெரிந்துகொண்டால்தான் நாம் இரட்சிக்கப்படவும், வெற்றியுள்ள வாழ்க்கை நடத்தவும் ஏதுவாகும்.

4. இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாக தனிப்பட்ட முறையில் **நம்மை சாத்தானின் இராஜ்யத்திலிருந்தும், வல்லமையிலிருந்தும் தேவன் விடுவித்துள்ளார்.** இதன் மூலம் சாத்தான் தோற்கடிக்கப்பட்டவனாக இருக்கிறான். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்வோமென்றால் சாத்தான் மீதான இந்த மகிமையான வெற்றியில் நாமும் பங்கடைகிறவர்களாக இருப்போம்!

## பாடம்

### I. சாத்தானைப் பற்றிய உண்மைகள் :

**கேள்வி :** சாத்தான் இந்த உலகைப் பாதித்துள்ள தீமையான சக்தியா? அல்லது உண்மையிலேயே அவன் இருக்கின்ற ஒரு ஜீவனா? அல்லது இந்த உலகத்திலே சக்தி படைத்த ஓர் நபரா? (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் மூலமாக சாத்தான் இருப்பதையும், அவனுடைய வல்லமையையும் முழுவதுமாகப் புரிந்துகொள்ளலாம்).

**1. பழைய ஏற்பாட்டில் :**

அ. சாத்தான் ஏவாளை தந்திரமாக ஏமாற்றினான் (ஆதியாகமம் 3:1–6).

ஆ. அவன் யோபுவை தாக்கியதுமட்டுமல்லாமல் குற்றமும் சாட்டினான் (யோபு 1:6; 2:13).

இ. சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலரைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டான் (1 நாளாகமம் 21:1).

ஈ. சாத்தான் என்பதற்கு பகைவன் அல்லது எதிரி என்று கருத்து. இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் 17 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

உ. எசேக்கியேல் 28:12–16, ஏசாயா 14:12–17 முதலிய வசனங்களைப் படித்து தியானிக்கவும்.

**2. புதிய ஏற்பாட்டில் சாத்தானைப் பற்றிய உண்மைகள் :**

அ. சாத்தான் வனாந்தரத்தில் இயேசுகிறிஸ்துவை சோதித்தான் (மத்தேயு 4:1–11; லூக்கா 4:1–13).

இயேசுகிறிஸ்துவில் பாவம் இல்லாத காரணத்தினால், (1 பேதுரு 2:22; 2 கொரிந்தியர் 5:21) மற்றவர்களை சோதிப்பது போல், அவர் சோதிக்கப்பட்டிருக்க முடியாது.

ஆ. சீமோனாகிய பேதுருவை கோதுமையை சுளகினால் புடைக்கிறதுபோல புடைக்கிறதற்கு சாத்தான் உத்தரவு கேட்டுக்கொண்டான் (லூக்கா 22:31).

இ. யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவை காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினான் (யோவான் 13:2).

ஈ. சாத்தான் அனனியாவையும், சப்பீராளையும் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி தூண்டினான் (அப்போஸ்தலர் 5:1–11).

உ.. சாத்தான் பவுலைக் குட்டுகிற தூதனாயிருந்தான் (2 கொரிந்தியர் 12:7).

**3. புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் அனைவரும் சாத்தான் ஒரு நபராக இருப்பதையும் அவனைக் குறித்ததான உண்மைகளையும் முழுவதுமாக தெரிந்திருந்தார்கள்.**

1. **மத்தேயு** .. சோதிக்கிறவனாகப் பார்க்கிறார், தேவராஜ்யத்தின் வசனத்தை விதைக்கும்போது, சாத்தான் அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்கிறவனாகவும், குழப்பத்தை விதைக்கிறவனாகவும் பார்க்கிறோம் (மத்தேயு 4:1–13; 13:19,39).
2. **மாற்கு** .. பெயல்செபூலாகவும், பிசாசுகளின் தலைவனாகவும் பார்க்கிறார் (மாற்கு 3:22–26).
3. **லூக்கா** .. அலைக்கழிக்கிறவனாகப் பார்க்கிறார் (லூக்கா 9:42). நோய்களினால் கட்டுகிறவன் (லூக்கா 13:16). கோதுமையை சுளகினால் புடைக்கிறதுபோல விசுவாசிகளைப் புடைக்கிறவன் (லூக்கா 22:31).
4. **யோவான்** .. மனுஷ கொலைபாதகனாகவும், பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாகப் பார்க்கிறார் (யோவான் 8:44). இந்த உலகத்தின் அதிபதி (யோவான் 12:31). அவிசுவாசிகளின் தகப்பன் (1 யோவான் 3:10). உலகம் அனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு (வெளி. 12:9).
5. **பவுல்** .. ஆகாயத்து அதிகாரப்பிரபு (எபேசியர் 2:2). இப்பிரபஞ்சத்தின் தேவன் (2 கொரிந்தியர் 4:4).
6. **பேதுரு** .. எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிற கெர்ச்சிக்கிற சிங்கம் (1 பேதுரு 5:8).
7. **யாக்கோபு** .. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்று கூறுகிறார் (யாக்கோபு 4:7).
8. **யூதா** .. தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதன். பிரதானதூதனாகிய மிகாவேல், அவனை தூஷணமாய்க் குற்றப்படுத்தவில்லை என்று பார்க்கிறோம் (யூதா 6,9).

**4. சாத்தானுடைய குணாதியங்கள், அவன் மெய்யாகவே ஒரு நபர் என்றும், சாதாரண ஒரு தீய சக்தி அல்ல என்றும் விளக்குகின்றன.**

| | | |
|---|---|---|
| 1. சோதிக்கிறான் | .. | ஆதியாகமம் 3:1–6; மத்தேயு 4:1–11 |
| 2. பொய் சொல்லுகிறான் | .. | யோவான் 8:44 |
| 3. கொலைபாதகன் | .. | யோவான் 8:44 |
| 4. அவிசுவாசிகளின் தகப்பன் | .. | 1 யோவான் 3:10 |
| 5. ஏமாற்றுக்காரன் | .. | வெளி. 12:9 |
| 6. குருடாக்குகிறவன் | .. | 2 கொரிந்தியர் 4:4 |
| 7. போர்த் தந்திர ஆயுதங்களை உபயோகிப்பவன் | .. | 2 கொரிந்தியர் 2:11 |
| 8. குற்றம் சாட்டுகிறவன் | .. | வெளி. 12:10 |
| 9. தாக்குகிறவன் | .. | யோபு 1,2 அதிகாரங்கள் |
| 10.வியாதியினாலே கட்டுகிறவன் | .. | லூக்கா 13:16 |
| 11. புடைக்கிறவன் (சோதிக்கிறவன்) | .. | லூக்கா 22:31 |

**5. சாத்தான் இல்லை என்று மறுக்கும்போது :**

1. நாம் சத்திய வேதத்தை மறுக்கிறோம், இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கிறோம் (மத்தேயு 13:39; யோவான் 8:44).

2. வேதாகமத்தின் ஒருமைப்பாட்டையும், அதிகாரத்தையும் மறுக்கிறோம். ஏனென்றால் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

## II. சாத்தானின் தோற்றம் :

**கேள்வி:** தேவன் சாத்தானைப் படைத்தாரா? இல்லை என்றால் அவன் எங்கிருந்து தோன்றினான்?

வேதாகமத்தின் இரண்டு பாகங்கள் நமக்கு இந்தக் காரியங்களைக் குறித்து கற்றுத்தருகின்றன.

### அ. எசேக்கியல் 28:12–17

இந்தக் குறிப்பிட்ட பகுதியில் ஒரு நபரைக்குறித்து (தீருராஜா) தீர்க்கதரிசி சொல்லுகிறார். ஆனால் அவர் மனதில் வேறொரு நபரை (சாத்தானை) நினைத்துக்கொண்டே இந்தக் காரியங்களைக் கூறுகிறார். இங்கே குறிப்பிட்டுள்ள தீருராஜா சாத்தானுக்கு ஒப்பாயிருக்கிறார், இது சொல்லப்பட்ட சூழ்நிலையைக் கவனிக்கும்போது தெளிவாக விளங்கும். மத்தேயு 16:23 மற்றும் ஆதியாகமம் 3:14,15 வசனங்களைப் பார்க்கவும்.

<u>குறிப்பு :</u>

இந்தப் பகுதிகள் மூலமாக சாத்தானைக் குறித்து பின்வரும் காரியங்களைத் தெரிந்து கொள்கிறோம்.

1. அவன் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு சிருஷ்டியாக இருந்தான், இருக்கிறான் (வசனம் 13,15).
2. விண்ணுலகத்தைச் சார்ந்த தேவதூதர்களாகிய இவர்கள் தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு அடையாளமாகப் படைக்கப்பட்டவர்கள். தேவனுடைய நீதிக்குப் பாதுகாப்பளிப்பதும், உறுதுணையாயிருப்பதும் (பரிபாலிப்பதும்) இவர்களைப் பற்றிய தேவனுடைய நோக்கமாகும் (ஆதியாகமம் 3:24). தேவனின் கிருபாசனத்தின்மீது காவல் காப்பவை (யாத்திராகமம் 25:22). கர்த்தரின் இராஜரீகத்தை காப்பவை (சங்கீதம் 99:1)
3. அவன் அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் (வசனம் 14). அவனுக்கு விசேஷ வல்லமையும், அதிகாரமும் கொடுத்து தேவனால் தனியாக பிரித்து வைக்கப்பட்ட கேரூப் (வசனம் 14). 'பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்' என்று காண்கிறோம். மேலும் தேவன் அவனுக்கு அதிகாரமும் கொடுத்திருந்தார்.
4. அவன் தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன் (வசனம் 13). தேவனின் பிரசன்னத்தில் இருந்தவன்.
5. அவன் ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன் (வசனம் 12).
6. அவன் பத்துவகையான இரத்தினக்கற்களால் மூடப்பட்டு இருந்தவன். இவைகள் உலகத்தின் இராஜ்ஜியங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றன.
7. அவன் இசையோடுகூட தொடர்பு உள்ளவனாகவும் இருந்தான் (வசனம் 13). (அவன் விழுந்துபோகும் நிலையில் மட்டுமல்லாது, இப்போதும் இதேபோல் தான் இருக்கிறான்).
8. அவன் தன்னுடைய வழியில் அநியாயம் கண்டுபிடிக்கும்வரை குறைவற்று இருந்தான். தன்னுடைய அழகினால் அவனுடைய இருதயம் மேட்டிமையாயிற்று. தேவனுக்கு எதிராகப் புரட்சி செய்ததால், தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளப்பட்டவன் (வசனம் 15–17; யூதா 6).

### ஆ. ஏசாயா 14:12–17

இந்தப் பகுதியிலிருந்து நாம் கீழ்கண்ட காரியங்களை அறிந்துகொள்கிறோம் :

1. ஆதியிலே அவனுடைய உண்மையான பெயர் சாத்தான் இல்லை 'லூசிபர்' என்பதே. அதன் அர்த்தம் 'விடிவெள்ளி' என்பதாகும் (வசனம் 12). தீர்க்கதரிசனத்தில் நட்சத்திரம் அல்லது வெள்ளி என்ற வார்த்தை தேவதூதர்களைக் குறிப்பிடுவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. சாத்தானும் ஒரு காலத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு, உன்னத நிலையில் வைக்கப்பட்ட தூதனாக–லூசிபர் (விடிவெள்ளி) என்பவனாக இருந்தான்.
2. இங்கே லூசிபரின் இருதயம் பெருமையினால் நிறைந்து (எசேக்கியேல் 28:17) 'நான் செய்வேன்' என்று ஐந்து காரியங்களைக் குறிப்பிடுகிறான். கடைசியில் ''நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன்'' என்று தன் இருதயத்தில் கூறினான் (வசனம் 14).

<u>குறிப்பு :</u>

தேவன் ஒருவருக்கே உரித்தான ஆராதனையை லூசிபர் விரும்புகிறான். இன்றைக்கும் அதனை விரும்புகிறான், இயேசுகிறிஸ்துவே தன்னைப் பணிந்துகொள்ள வேண்டும் என விரும்பினான் (மத்தேயு 4:9,10).

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்னதாக, சாத்தான் பூமியின் குடிகளை மோசம் போக்கி மிருகத்தை வணங்கச் செய்வதின் மூலமாக பூமியின் குடிகள் தன்னை ஆராதிக்கவேண்டும் என்று விரும்புகிறான் (வெளி. 13:12–15).

3. லூசிபர் தனக்கென்று ஒரு சிங்காசனத்தை உடையவன் என்பதைக் காண்கிறோம் (ஏசாயா 14:13). இப்போதும் இந்த உலகத்தின் அதிபதியாக தன்னுடைய சிங்காசனத்திலிருந்து ஆளுகை செய்கிறவனாகவே இருக்கிறான் (வெளி. 2:3; 13:2).

4. சாத்தான் கீழே விழத்தள்ளப்பட்டான் என்பதையும், அவனுக்கு இறுதியில் நியாயத்தீர்ப்பு உண்டு என்பதையும் தீர்க்கதரிசனம் கூறுகிறது (ஏசாயா 14:15–17).

## III. சாத்தான் இயங்கும் விதம் :

**கேள்வி :** லூசிபர் தோல்வியுற்று விழுந்தபின் இப்போது அவன் எங்கே இருக்கிறான்?

அ. யோபு 1:6 .. கர்த்தர் சாத்தானைப் பார்த்து நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான் கர்த்தருக்குப் பதிலாக பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான்.

சாத்தான் இந்த உலகம் முழுவதும் சுற்றி இயங்கி வருகிறான் என்று காணலாம்.

<u>குறிப்பு :</u>

1 பேதுரு 5:8 .. உலகெங்கும் சுற்றி எவனை விழுங்கலாமென்று வகை தேடிக்கொண்டிருக்கிறான்.

ஆ. எபேசியர் 2:2 .. கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபு.

**சாத்தான் வேலை செய்கிற இடம் :** விசுவாசிகளின் இருதயமும், வாழ்க்கையுமாகும்.

இ. எபேசியர் 6:12 .. வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. நாம் கிறிஸ்துவுடன் வைத்துள்ள ஆவிக்குரிய ஐக்கியம், வாழ்க்கை ஆகிய எல்லைகளிலும் அவன் கிரியை செய்கிறான் (எபேசியர் 1:3, 2:6).

## IV. சாத்தானின் வல்லமை :

சாத்தானின் வல்லமையை அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

**1. இந்த உலகத்தின் அதிபதி : (யோவான் 12:31, 14:30)**

சாத்தான் இந்த உலகத்தின் சர்வ அதிகாரம் கொண்ட ராஜா என்று அழைக்கப்படுவதில்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவர் மாத்திரமே இந்த உலகத்தின் இராஜாவாக இருக்கிறார் (சங்கீதம் 2:6, 24:10).

இந்த உலகத்தின் அதிபதியாக சாத்தான் தற்போதுள்ள உலகத்தின் முறைமைகளுக்கும் அதன் அரசியல், மதம், சமுதாயம், கல்வி மற்றும் இராணுவ முறைமைகளுக்கும் தலைவனாக இருக்கிறான்.

<u>குறிப்பு :</u>

சாத்தானைக் குறித்த உண்மைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள காரியங்களினால் நிரூபிக்கப்படுகிறது :

அ. கிறிஸ்துவின் நிமித்தமாக இந்த உலகம் உங்களைப் பகைக்கும் (யோவாள் 15:18–25).

ஆ. பிசாசானவன் இயேசுகிறிஸ்துவை சோதிக்கும்போது உலகம் முழுவதிலும் தனக்கு அதிகாரம் உண்டு என்று உரிமை பாராட்டினான் (லூக்கா 4:5–7). உலகத்தின் எல்லா இராஜ்யங்கள் மேலும் சகல அதிகாரங்களும், மகிமையும் தனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறதாகக் கூறினான்.

இ. சாத்தானின் கோட்பாடுகளான பெருமை, பேராசை, வல்லமை, இராணுவ வலிமை பொருளாதாரம், பாவசந்தோஷம், சுயவிருப்பம் முதலியவைகளால் உலகத்தைக் கட்டுபடுத்தி உலகமனைத்தையும் ஒன்றாக இணைத்துள்ளான்.

**2. ஆகாயத்து அதிகாரப்பிரபு : (எபேசியர் 2:2)**

இதன்படி சாத்தானானவன்,

1. உலகில் காணப்படாதவைகளுக்கும், பொல்லாத அதிகராங்களுக்கும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளுக்கும், தலைவனாயிருக்கிறான் (எபேசியர் 6:12,13; கொலோசெயர் 1:16–18, 2:15).
2. காணமுடியாத ஆவியாக, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் (அவிசுவாசிகள்) இப்போது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரபிரபு (எபேசியர் 2:2).

3. இருளின் அதிகாரத்துக்கு அதிபதியானவன் சாத்தான் எனக் காண்கிறோம். அந்த இருளின் அதிகாரத்திலிருந்து விசுவாசிகளான நாம் விடுவிக்கப்பட்டுள்ளோம் (கொலோசெயர் 1:13; அப்போஸ்தலர் 26:18; எபேசியர் 5:8).

**3. நமது எதிராளி : (1 பேதுரு 5:6–9)**

சாத்தான் என்ற பதத்திற்கு பகைவன் அல்லது எதிரி என்பது பொருள். அவன் இன்றைக்கும் தேவனுடைய நீதிக்கு எதிராகக் கிரியை செய்கிறான். தேவனுக்கும் அவருடைய நீதிக்கும் எதிர்த்து நிற்கிற பகைவனாய் சாத்தான் இருக்கிறான்.

1. சாத்தான் கிறிஸ்துவுக்கும், தேவனுக்கும் எதிராய் இருக்கிறான் (மத்தேயு 4:1–11; யோவான் 13:27). பாவமனிதன் என்றழைக்கப்படுகிற அந்திக்கிறிஸ்து மூலமாக தேவனை எதிர்க்கிறவனாகவே இருக்கிறான் (2 தெசலோனிக்கேயர் 2:4).
2. கிறிஸ்தவர்களுக்கும் எதிரியாய் இருக்கிறான் (லூக்கா 22:31; 2 கொரிந்தியர் 2:11, 12:7).
3. உலகமனைத்திலுமுள்ள மனுஷருக்கும் பகைவனாய் இருக்கிறான் (வெளி.12:9; 2 தெசலோனிக்கேயர் 2:9,10 அப்போஸ்தலர் 26:18).

**4. ஏமாற்றுக்காரன் : (வெளி. 12:9,10)**

1. உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு (வெளி. 12:9).
2. அவன் பொய்யன் (யோவான் 8:44).
3. ஒளியின் தூதனுடைய வேஷத்தையும், நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தையும் தரித்துக் கொள்ளுகிறவன் (2 கொரிந்தியர் 11:13,14).
4. அவன் கள்ளப்போதகர்களையும், கள்ளத்தீர்க்கதரிசிகளையும் எழுப்புகிறவன் (1 இராஜாக்கள் 22:22; 2 பேதுரு 2:1,2; 2 கொரிந்தியர் 11:15).
5. அவன் தேவனுடைய வார்த்தையின் மேலும், ஆண்டவருடைய உண்மையின் மேலும் வைக்கும் விசுவாசத்தை அழித்துப்போடுகிறவனாக இருக்கிறான் (ஆதியாகமம் 3:1–6).

**5. பொல்லாங்கானவன் : (1 யோவான் 5:19)**

1. உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது (1 யோவான் 5:19).
2. பொல்லங்கனான சாத்தான் நல்ல விதைகளின் நடுவே களைகளை விதைக்கிறான். அதன்மூலம் கிறிஸ்துவத்திற் குள்ளாக ஒரு மாபெரும் குழப்பத்தை உண்டுபண்ணுகிறான் (மத்தேயு 13:38,39).
3. ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்கும்போது, பொல்லாங்கன் வந்து விதைக்கப்பட்டதை அவனுடைய இருதயத்திலிருந்தும், மனதிலிருந்தும் எடுத்துப்போடுகிறான் (மத்தேயு 13:19).
4. கிறிஸ்துவின் பிள்ளைகளை அக்கினியாஸ்திரங்களினால் தாக்குகிறான் (எபேசியர் 6:16).

**6. இந்தப் பிரபஞ்சத்தின் தேவன் : (2 கொரிந்தியர் 4:4)**

சாத்தானானவன் உண்மையும், ஜீவனுமான தேவனாயில்லாவிட்டாலும், அவன் அப்போஸ்தவர்களால் ‘இப்பிரபஞ்சத்தின் தேவன்’ என்று அழைக்கப்படுகிறான்.

ஆண்டவர் நம்முடைய ஆராதனையை களிகூர்ந்து ஏற்றுக்கொள்ளும்போது சாத்தான் அந்த ஆராதனையை ஆரம்பத்திலிருந்தே தான் பெற்றுவிடவேண்டும் என்று விரும்பினான். மேலும் நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் சொல்விக்கொண்டான் (ஏசாயா 14:14).

1. இயேசுகிறிஸ்துவை தன்னைப் பணிந்துகொள்ளும்படி சோதித்தான் (லூக்கா 4:7).
2. கடைசிக் காலங்களில் அந்திக்கிறிஸ்துவாக வெளிப்படுகிற சாத்தானை பூமியின் குடிகள் அனைவரும் வணங்குவார்கள் (வெளி. 13:12).
3. தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளான அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான். அதன் நோக்கம் ஜனங்கள் அவரை அறிந்து அவரைத் தொழுதுகொள்ளக் கூடாது என்பதே (2 கொரிந்தியர் 4:4).
4. சாத்தான், எப்போதெல்லாம் இந்த உலக மக்களை பாவத்தையும், அதன் சந்தோஷங்களையும் நேசிக்கிறவர்களாக மாற்றுவதில் வெற்றி கொள்ளுகிறானோ அப்போதெல்லாம் தேவனுக்குரிய ஆராதனையை அவன் சொந்தமாக்கிக் கொள்கிறான் (யோவான் 3:19; 2 தீமோத்தேயு 3:4).

5. கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கு வெளியரங்கமாகவே சாத்தானை வணங்குகிறார்கள்.

7. **சாத்தானின் வல்லமையைக்குறித்து ஆராயும்போது கீழ்கண்ட காரியங்களை நாம் தெரிந்துகொள்ளலாம் :**

1. **பாவியாகிய மனிதனுடன் தொடர்புடைய காரியங்கள் :**

அ. குருடாக்குகிறவன் (2 கொரிந்தியர் 4:4).

ஆ. தன் இச்சைப்படி செய்ய மக்களைப் பிடிக்கிறவன் (2 தீமோத்தேயு 2:26).

இ. மனிதனை அவனுடைய அதிகாரத்தினுள் பிடித்து வைப்பவன் (1 யோவான் 5:19; அப்போஸ்தலர் 26:18).

ஈ. உங்களில் கிரியை செய்து உங்கள் வாழ்க்கையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறவன் (எபேசியர் 2:2).

உ. உங்களை எதிர்க்கிறவன் (2 தெசலோனிக்கேயர் 2:4).

ஊ. உங்களை ஏமாற்றுகிறவன் (வெளி. 12:9).

எ. பரலோக இராஜ்யத்தை சுதந்தரிக்கவிடாமல் நம்மைத் தடுத்து நிறுத்துகிறவன் (சங்கீதம் 9:17; மத்தேயு 25:41).

2. **பரிசுத்தவான்களுடன் தொடர்புடைய காரியங்கள் :**

அ. நம்மை வஞ்சிக்கிறவன் அல்லது மயக்குகிறவன் (ஆதியாகமம் 3:1–6; 2 கொரிந்தியர் 11:3).

ஆ. நம்மை சோதிக்கிறவன் (யோபு 1,2 –ம் அதிகாரங்கள்).

இ. நம்மை விழுங்க வகைதேடுகிறவன் (1 பேதுரு 5:8).

ஈ. நம்மை மோசம் போக்குகிறவன் (2 கொரிந்தியர் 2:11).

உ. நம்மை தாக்குகிறவன் (எபேசியர் 6:10–17).

ஊ. பொய் சொல்லும்படி நம்முடைய இருதயத்தை ஏவுகிறவன் (அப்போஸ்தலர் 5:1–4).

எ. நம்மை குற்றம் சாட்டுகிறவன் (வெளி. 12:10).

ஏ. நம்மை குட்டுகிறவனாயிருக்கிறான் (2 கொரிந்தியர் 12:7).

ஐ. கோதுமையை சுளகினால் புடைக்கிறது போல நம்மை புடைக்கிறவன் (லூக்கா 22:31).

## V. சாத்தானை எவ்வாறு தோற்கடிக்க முடியும்?

அ. முதலாவதாக விசுவாசியான நீங்கள் நினைவிற் கொள்ளவேண்டிய காரியம் என்னவென்றால், உங்களில் இருப்பவர் இந்த உலகத்தில் இருக்கிற சாத்தானைக் காட்டிலும் பெரியவர் என்பதாகும் (1 யோவான் 4:4).

ஆ. இரண்டாவதாக, சாத்தானுடைய வல்லமை, அதிகாரம் யாவும் சிலுவையிலே நொறுக்கப்பட்டுவிட்டது என்பதை விசுவாசிகளான நாம் மனதிற்கொள்ள வேண்டும் (எபிரெயர் 2:14; 1 யோவான் 3:8; கொலோசெயர் 2:15). விசுவாசத்தின் மூலமாக நாம் நம்மை இந்த வெற்றியின் உள்ளாக இணைத்துக் கொள்ளலாம்.

இ. வெளி.12:11–மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானை ஜெயித்தார்கள். எனவே நாமும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், தேவனுடைய வசனத்தினாலும் சாத்தானை தோற்கடிக்கலாம்.

அதாவது சிந்தப்பட்ட இரத்தத்தினால் உண்டான வல்லமையில் உரிமை பாராட்டி, தேவனுடைய வசனத்தைக் கொண்டு தைரியத்தோடும், உண்மையோடும் ஆண்டவருக்காகப் பேசவேண்டும்.

ஈ. யாக்கோபு 4:7; 1 பேதுரு 5:9–நாம் சாத்தானுக்கு எதிர்த்து நிற்கும்போது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான் என்று பார்க்கிறோம். எனவே நாம் அவனை எதிர்த்துப்போராடக் கற்றுக்கொள்ளவேண்டும்.

உ. தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ள வேண்டும் (எபேசியர் 6:10–17; 2 கொரிந்தியர் 10:4). நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.

ஊ. தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும், விசுவாசமென்னும் கேடகத்தையும் எடுத்துக்கொண்டு ஆவியிலே ஜெபம் பண்ணி அவனை எதிர்க்க வேண்டும் (எபேசியர் 6:16–18). வேதாகமமே ஆவியின் பட்டயமாகும். அதைக் கற்று தியானிப்பதின் மூலமாக சாத்தானை ஜெயம் கொள்ளலாம். விசுவாசம் என்னும் கேடகத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் ஆவியினாலே உண்மையாக ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எ. நீங்கள் ஒரு அவிசுவாசியாக இருந்தால், இயேசுகிறிஸ்துவினுடைய நற்செய்தியை நம்பி கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் உங்களை இருளின் அதிகாரத்திலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் விடுவிக்க வல்லவராயிருக்கிறார் (எபிரெயர் 2:14; 1 யோவான் 3:8; அப்போஸ்தலர் 26:18; கொலோசெயர் 1:13).

## VI. சாத்தானின் நியாயத்தீர்ப்பும், அழிவும் :

அ. சாத்தான் கடைசிவரை போராடுவான். இயேசுகிறிஸ்துவுக்கு எதிராகக் கடைசியாக நடைபெற இருக்கும் அர்மகெதோன் யுத்தத்திலே வல்லமையோடு யுத்தம் செய்வான் (வெளி. 19:19).

ஆ. அந்த யுத்தத்தின் முடிவிலே சாத்தான் வல்லமையுள்ள தூதனாலே ஆயிரம் வருஷமளவும் பாதாளம் என்ற அடியில்லாத குழியிலே தள்ளப்படுவான் (வெளி 20:1,2; ஏசாயா 14:15).

இ. இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி முடிந்தவுடன் சாத்தான் கொஞ்சக்காலம் விடுதலை செய்யப்படுவான் (வெளி 20:7) . அப்போதும் அவன் கிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் செய்வான். அவனுடைய சேனைகள் அழிக்கப்பட்டு, பிசாசானவன் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவான். அங்கே அவன் இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவான் (வெளி. 20:9,10).

**முடிவுரை :**

சாத்தானானவன் நமக்கு ஒரு பயங்கரமான, **வல்லமையுள்ள எதிரியாய்** இருக்கும் போது தேவன் **நமக்கு உண்மையும், சர்வ வல்லமையுள்ள நண்பராயும்** இருக்கிறார். மனிதன் வாழ்வு அல்லது சாவு. ஆசீர்வாதம் அல்லது சாபம். ஒளி அல்லது இருள், பரலோகம் அல்லது நரகம், கிறிஸ்து அல்லது சாத்தான் இவற்றில் ஏதாவது ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டியவனாக இருக்கிறான். ஆகவே உன் ஆத்துமா வாழ்ந்திருக்கும்படி ஜீவனைத் தெரிந்துகொள் என்று வேதம் கூறுகிறது (உபகாமம் 31:19). சாத்தானின் இறுதித் தோல்வியை எண்ணி சந்தோஷப்படுங்கள். மேலும் உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர் என்பதை அறிந்து சந்தோஷப்படுங்கள் (1 யோவான் 4:4). நீங்கள் கடைசியாக உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வல்லமையில் ஜீவிப்பதினால் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்!

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# சாத்தான்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. சாத்தானைக்குறித்து விசுவாசிகள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம், ஏன் ?
   a. கிறிஸ்துவை விசுவாசிக்கும் மக்களாக மாறுவதைத் தடுக்கிறான்
   b. தேவனுக்கும், விசுவாசிக்கும் மகா பெரிய எதிரியாக இருக்கிறான்
   c. கிறிஸ்து சாத்தான்மீது வெற்றிக் கொண்டார்
2. சாத்தான் எங்கிருந்து வந்தான் ?
   a. நரகத்திலிருந்து வந்தான்
   b. இருளிலிருந்து வந்தான்
   c. தேவனால் படைக்கப்பட்ட தேவதூதன்
3. சாத்தானின் முதல் பெயர் என்ன ?
   a. காபிரியேல் b. லூசிபர் c. மிகாவேல்
4. பரலோகத்தில் சாத்தான் செய்த பாவம் என்ன ?
   a. அவன் கொடுமைக்காரன்
   b. அவன் பொய்யன்
   c. அவன் பெருமைக்காரன்
5. சாத்தான் யாரை ஆளுகை செய்கிறான் ?
   a. விசுவாசிகள்
   b. அவிசுவாசிகள்
   c. தேவதூதர்கள்
6. இறுதியில் சாத்தானுக்கு இயேசு கிறிஸ்து என்ன செய்வார் ?
   a. அவர் அவனை மன்னிப்பார்
   b. அவர் அவனை அக்கினிக்கடலில் தள்ளுவார்
   c. அவர் அவனை பரலோகத்தில் சிறப்பான இடத்தில் வைப்பார்
7. ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் சாத்தான் என்ன செய்ய முடியும் ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)
   a. 2 கொரிந்தியர் 11:3 ------------------------------------------------------------
   b. யோபு 1, 2 அதிகாரங்கள் ------------------------------------------------------------
   c. அப்போஸ்தலர் 5:1–4 ------------------------------------------------------------
   d. வெளி. 12:10 ------------------------------------------------------------

8. சாத்தானைக்குறித்து கீழே உள்ள வசனங்கள் என்ன சொல்லுகிறது? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

   a. எபேசியர் 2:2 ----------------------------------------------------------------

   b. யோவான் 8:44 ----------------------------------------------------------------

   c. லூக்கா 4:7 ----------------------------------------------------------------

9. சாத்தான் ஒரு நபர் என்பதை அறிந்து கொள்வதற்கான **மூன்று** வழிகளை எழுதுக.

   1. ----------------------------------------------------------------------------

   2. ----------------------------------------------------------------------------

   3. ----------------------------------------------------------------------------

10. சாத்தானைக்குறித்து கீழே உள்ள ஆசிரியர்கள் சொல்வது என்ன? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

   a. மாற்கு (மாற்கு 3:22–26) ---------------------------------------------------

   b. பவுல் (எபேசியர் 2:2) ---------------------------------------------------

   c. பேதுரு (1 பேதுரு 5:8) ---------------------------------------------------

   d. யூதா (யூதா 6,9) ---------------------------------------------------

11. சாத்தான் சோதிக்கும் பொழுது அதை மேற்கொள்ள விசுவாசிகள் செய்ய வேண்டிய ஏதேனும் **மூன்று** காரியங்களை எழுதவும்.

   1. ----------------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------------

   2. ----------------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------------

   3. ----------------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------------

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ________________________________________________

**முகவரி :** ________________________________________________

________________________________________________